ஸ்ரீ:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

ஸ்ரீமாந் வேங்கடநாத$_2$ார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேத$_3$ாந்தாசார்யவர்யோ மே ஸந்நித$_4$த்தாம் ஸத$_3$ா ஹ்ருதி$_3$ ॥

குலசேகரப்பெருமாள் அருளிச்செய்த

# ॥ தருதுயரந்தடாயேல் ॥

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iittam font.

ஶ்ரீ:
ஶ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ தருதுயரந்தடாயேல் ॥

விற்றுவக் கோட்டம்மானையே வேண்டி நிற்றல்

‡தரு துயரம் தடாயேல்⋆ உன் சரண் அல்லால் சரண் இல்லை⋆
விரை குழுவும் மலர்ப் பொழில் சூழ்⋆ விற்றுவக்கோட்டம்மானே⋆
அரிசினத்தால் ஈன்ற தாய்⋆ அகற்றிடினும்⋆ மற்றவள் தன்
அருள் நினைந்தே அழும் குழவி⋆ அதுவே போன்றிருந்தேனே (1)

கண்டார் இகழ்வனவே⋆ காதலன் தான் செய்திடினும்⋆
கொண்டானை அல்லால்⋆ அறியாக் குல மகள் போல்⋆
விண் தோய் மதிள் புடை சூழ்⋆ விற்றுவக்கோட்டம்மா⋆ நீ
கொண்டாளாயாகிலும்⋆ உன் குரை கழலே கூறுவனே (2)

மீன் நோக்கும் நீள் வயல் சூழ்⋆ விற்றுவக்கோட்டம்மா⋆ என்
பால் நோக்காய் ஆகிலும்⋆ உன் பற்றல்லால் பற்றிலேன்⋆
தான் நோக்காது⋆ எத்துயரம் செய்திடினும்⋆ தார் வேந்தன்
கோல் நோக்கி வாழும்⋆ குடி போன்றிருந்தேனே (3)

வாளால் அறுத்துச் சுடினும்⋆ மருத்துவன் பால்⋆
மாளாத காதல்⋆ நோயாளன் போல் மாயத்தால்⋆
மீளாத் துயர் தரினும்⋆ விற்றுவக்கோட்டம்மா⋆ நீ
ஆளா உனதருளே⋆ பார்ப்பன் அடியேனே (4)

வெங்கண் திண் களிறடர்த்தாய்⋆ விற்றுவக்கோட்டம்மானே⋆
எங்குப் போய் உய்கேன்⋆ உன் இணை அடியே அடையல் அல்லால்⋆
எங்கும் போய்க் கரை காணாது⋆ எறி கடல் வாய் மீண்டேயும்⋆
வங்கத்தின் கூம்பேறும்⋆ மாப் பறவை போன்றேனே (5)

செந் தழலே வந்து⋆ அழலைச் செய்திடினும்⋆ செங்கமலம்
அந்தரம் சேர்⋆ வெங்கதிரோற்கல்லால் அலராவால்⋆
வெந் துயர் வீட்டாவிடினும்⋆ விற்றுவக்கோட்டம்மா⋆ உன்
அந்தமில் சீர்க்கல்லால்⋆ அகம் குழைய மாட்டேனே (6)

www.prapatti.com

எத்தனையும் வான் மறந்த காலத்தும்⋆ பைங்கூழ்கள்⋆
மைத்தெழுந்த மா முகிலே⋆ பார்த்திருக்கும் மற்றவை போல்⋆
மெய்த் துயர் வீட்டாவிடினும்⋆ விற்றுவக்கோட்டம்மா⋆ என்
சித்தம் மிக உன் பாலே⋆ வைப்பன் அடியேனே (7)

தொக்கிலங்கு யாறெல்லாம்⋆ பரந்தோடித்⋆ தொடு கடலே
புக்கன்றிப் புறம் நிற்க⋆ மாட்டாத மற்றவை போல்⋆
மிக்கிலங்கு முகில் நிறத்தாய்⋆ விற்றுவக்கோட்டம்மா⋆ உன்
புக்கிலங்கு சீர் அல்லால்⋆ புக்கிலன் காண் புண்ணியனே (8)

நின்னையே தான் வேண்டி⋆ நீள் செல்வம் வேண்டாதான்⋆
தன்னையே தான் வேண்டும்⋆ செல்வம் போல் மாயத்தால்⋆
மின்னையே சேர் திகிரி⋆ விற்றுவக்கோட்டம்மா⋆
நின்னையே தான் வேண்டி⋆ நிற்பன் அடியேனே (9)

‡விற்றுவக்கோட்டம்மா⋆ நீ வேண்டாயே ஆயிடினும்⋆
மற்றாரும் பற்றிலேன் என்று⋆ அவனைத் தாள் நயந்த⋆
கொற்ற வேல் தானைக்⋆ குலசேகரன் சொன்ன⋆
நற்றமிழ் பத்தும் வல்லார்⋆ நண்ணார் நரகமே (10)

॥ குலசேகரப்பெருமாள் திருவடிகளே சரணம் ॥

www.prapatti.com